https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இயேசுவின் நீதி போதனைகள்: சமூகப் பார்வை

**சி. இன்பநாதன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைகழகம்

**முனைவர் மு. சம்பத்குமார்**
உதவிப்பேராசிரியர், நெறியாளர்
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைகழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

*இயேசு கிறிஸ்து மனித உருவில் வாழ்ந்தவர்; சமூகப் பிரச்சனைகளைச் சந்தித்தவர்; பூமியின் நீள, அகலங்களைப் போல, பாவத்தின் அளவீடுகளையும் அறிந்தவர்; இறப்புவரை இன்னல்களை அனுபவித்தவர்; எனவே அவர்தம் போதனைகள் நீதியை நிலைநாட்டுவதாக உள்ளன.*

*மனித மாண்பு, தனிமனித ஒழுக்கம், நல்லறிவு, நன்னடத்தை, குடும்ப உறவுகள், சுயக் கட்டுப்பாடு, மனத்தாழ்வு, பொறுமை, அன்பு, நட்பு ஆகிய பண்புகளைப் பற்றியே அவர்தம் அறிவுரைகள் உள்ளன. இவ்வறிவுரைகள் அன்றாட வாழ்விற்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

*நன்கு வாழ்ந்தவர்கள், வாழும் தலைமுறைக்குக் கூறும் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், அவை அனுபவத்தின் வெளிப்பாடு; வாழ்வதற்கான வழிமுறைகள்; நாம் இயங்குவதற்கான இலக்கணங்கள்; நம்மை நெறிப்படுத்தும் நெம்புகோல்கள். எனவேதான் இயேசுகிறிஸ்து அறிவுரைகளின் வாயிலாக நம்மிடம் பேசுகிறார்.*

**"குழந்தைகளே, உங்கள் தந்தையாகிய எனக்குச் செவிசாயுங்கள்; நான் கூறுவதன்படி செயல்படுங்கள்; அப்பொழுது காப்பாற்றப்படுவீர்கள்"** *என்கிறார் (சீராக்கின் ஞானம், அதிகாரம்-3, வசனம்-1, பக். 1242)*

**அன்பு செய்**

**"உன்னைப் போலவே உன் அயலானையும் நேசி"** *என்றார் இயேசுகிறிஸ்து. சுயநலம் மற்றும் விருப்பு வெறுப்புகளின் இருப்பிடம்தான் நம் இதயம். இந்த இதயம் சொல்லும்படிதான் நாம் நடந்துகொள்கிறோம். அப்படியே பழகியும் விட்டோம். நல்ல மனம் கொண்ட நம்மிடம் பிறரைக் குறித்துத் தேவையில்லாத சில தவறான கருத்துகள்கூட குடிகொண்டுள்ளன. சில நேரங்களில் நமக்குத் தோன்றும் கருத்துகள் முற்றிலும் தவறானவை என்று நமது உள் மனத்திற்குத் தெரிந்தாலும்கூட அதனை நாம் ஏற்க மறுக்கின்றோம். பிடிவாதமாக*

இருக்கின்றோம். மனதை நாமாகவே இறுக்கமாக வைத்துக்கொள்கிறோம். தேவையின்றி கோபம் அடைகிறோம். பகையை வளர்க்கி ன்றோம். இதனால் நமது உடல் நிலை பாதிக்கப்படுகிறது. ஆனால் இயேசு கூறும் அன்பு விலைமதிப்பற்றது.

"அன்பு பொறுமையுள்ளது; அன்பு நன்மை செய்யும்; அன்பு பொறாமைப்படாது; அன்பு இறுமாப்பு அடையாது; அன்பு தற்புகழ்ச்சி கொள்ளாது; அன்பு இழிவானதைச் செய்யாது; அன்பு தன்னலம் நாடாது; அன்பு எரிச்சலுக்கு இடம் கொடாது; அன்பு தீங்கு நினையாது; அன்பு தீவினையில் மகிழ்வுறாது; அன்பு அனைத்தையும் பொறுத் துக் கொள்ளும்; அன்பு அனைத்தையும் நம்பும்; அன்பு அனைத்தையும் எதிர்நோக்கி யிருக்கும்; அன்பு அனைத்திலும் மன உறுதி யாய் இருக்கும்; அன்பு உண்மையில் மகிழும்; அறிவு அழிந்து போகும். ஆனால் அன்பு ஒருபோதும் அழியாது. ஏனெனில் நமது அறிவு அரைகுறையானது. அன்பு நமக்கில் லையேல், ஒலிக்கும் வெண்கலமும் ஓசை யிடும் தாளமும் போலாவோம். அறிவெல் லாம் பெற்றிருப்பினும் அன்பு நமக்கில்லை யேல் நாம் ஒன்றுமில்லை. நம் உடைமை எல்லாம் வாரி வாரி வழங்கினாலும் நம்மிடம் அன்பு இல்லை யேல் நமக்குப் பயன் ஒன்று மில்லை" (1 கொரிந்தியர் 13:1-9, பக். 253) எனவே இயேசு கூறியதைப் போல அனை வரையும் அன்பு செய்து அரவணைப்போம்.

## நட்பு கொள்

நட்பு நஞ்சு கொடுத்தாலும் நம்பி உண்ணும், நாதியற்று நலிவுறும் போது நாடிவந்து நலம் விசாரிக்கும், விழுந்து கிடக்கும் போது துணிவு தந்து தூக்கிவிடும். சோர்ந்து விடும்போது சொந்தம் கொண்டாடும். தவறிச் செல்லும் போது தேடிக் கண்டு பிடிக்கும். பொறுமை இழக்கும்போது புரிய வைக்கும், ஆதரவற்று நிற்கும்போது அரவ ணைக்கும், தடைகளைத் தாண்டும் போது தட்டிக் கொடுக்கும். வேண்டாதச் செயல் களை விரட்டியடிக்கும், துவண்டுப் போகும் போது துணைநிற்கும், தூக்கமுடியாத துன்பத் தில் தோள்கொடுக்கும். தப்பு செய்யும்போது தைரியமாய்த் தண்டிக்கும், எரிச்சலடையும் போது எச்சரிக்கும், விழவைத்தவரிடத்தில் எழவைக்கும், புண்பட்டால் ஆற்றும், புலம்பி னால் தேற்றும், துரோகத்தைத் துரத்தும், பசியில் பகிர்ந்து கொடுக்கும், வெறுப்புக்கு வேலிபோடும், குணத்தால் குளிரூட்டும், சிரமத்தில் செலவு செய்யும், காயப்படுத் தினால் கடிந்துரைக்கும், விரட்டியடித்தாலும் விரும்பிவரும், இல்லாத போதும் கடன் வாங்கிக் கொடுக்கும், அழுகையில் துடை க்கும், புகழுகையில் பணிய வைக்கும், இகழுகையில் இறுக்கிப்பிடிக்கும் இத்தகைய நட்பைக் குறித்து இயேசுகிறிஸ்து பின்வருமாறு கூறுகிறார்.

"இன்சொல் நண்பர் தொகையைப் பெருக்கும்; பண்பான பேச்சு உன் மதிப்பை உயர்த்தும். அனைவருடனும் நட்புடன் பழகு; ஆனால் ஆயிரத்தில் ஒருவரே உனக்கு ஆலோசகராய் இருக்கட்டும். ஆராய்ந்து நட்புக் கொள்; நண்பரையும் விரைவில் நம்பிவிடாதே. தன்னலம் தேடும் நண்பர்களும் உண்டு; அவர்கள் உன் நெருக்கடியான வேளையில் உன்னோடு இருக்க மாட்டார்கள். பகைவர் களாய் மாறும் நண்பர்களும் உண்டு; அவர் கள் உன் பலவீனத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி உனக்கு இழிவைக் கொண்டு வருவார்கள். உன்னுடன் விருந்துண்ணும் நண்பர்களும் உண்டு; அவர்கள் உன் நெருக் கடியான வேளையில் உன்னோடு இருக்க மாட்டார்கள்; நீ நல்ல நிலையில் இருக்கும் போது, அவர்கள் உன் உயிருக்கு உயிரான நண்பர்களாய் இருப்பார்கள்; உன் பணியாளர்களை ஆட்டிப்படைப்பார்கள். நீ தாழ்ந்து விட்டால் உனக்கு எதிராய் அவர் கள் மாறுவார்கள். உன் முகத்தில் விழிக்க மாட்டார்கள்.

உன் நண்பர்களிடம் எச்சரிக்கையாய் இரு. நம்பிக்கைக்குரிய நண்பர்கள் பாதுகாப்பான புகலிடம் போன்றவர்கள்; இத்தகைய நண்பர் களைக் கண்டவர்கள் புதையலைக் கண்ட வரைப் போன்றவர்கள். நம்பிக்கைக்குரிய நண்பர்களுக்கு ஈடான செல்வம் எதுவு மில்லை; அவர்களது தகைமைக்கு அளவு கோல் இல்லை. நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நலம் அளிக்கும் மருந்து போன்றவர்கள்; இறையச்சம் கொண்டவரே இத்தகைய நண்பர்களைக் கண்டடைவர்"

*(சீராக்கின்ஞானம், 6:5 முதல் 17 வரை, பக். 1245)* எனவே நட்பை நாடிப்பிடித்துப்

*பார்த்துப் பழகுவோம்.*

### பெற்றோரைப் பெருமைப்படுத்து

*வாலிபருக்கும் வயோதிகம் வரும். முடிகள் மூப்படைந்து முதுமைக்கு முன்னுரை எழுதும். விழிகள் வேலை நிறுத்தம் செய்யும், பார்வையில் பற்றாக்குறை ஏற்படும். தோல்கள் சுக்கங்காயாய்ச் சுருங்கும். உள்ளறுப்புகளுக்கு ஊட்டச்சத்து குறையும், நோய்கள் நோகடிக்கும், வலிகள் வாய்விட்டு அழும், வீடு வெளியே துரத்தும், உறவுகள் உதாசினப்படுத்தும், பாதங்கள் பச்சை மரம் நோக்கிப் பயணிக்கும், உள்ளம் மற்றவர்களின் உதவியை உற்றுநோக்கும், குருதி குமுறும், நாடி நரம்புகள் நடுங்கும், உணவு உண்ணாவிரதமிருக்கும், ஆடைகள் அவிழ்ந்து விழும், சிறுநீர் சிறையிருப்பை மீறும், மலஜலம் மரியாதையைக் குறைக்கும், நாய்கள் அவ்வப்போது தூய்மைப்பணி செய்யும், நாள்காட்டி நகரமுடியாமல் தவிக்கும், தனிமை தன்னந்தனியே புலம்ப வைக்கும், மரணம் மடிவிரிக்கும், அழுகை அழைப்பு மணி அடிக்கும். இது பெற்றோர்களின் நிலைமை, இது எல்லாருக்கும் பொதுவானது. இயேசு கிறிஸ்து பெற்றோர்களின் அருமை பெருமைகளையும், அவமதிப்புகளையும் குறித்து பின்வருமாறு அறிவுறுத்துகிறார்.*

**"தன் தந்தையின் நல்லுரையைப் புறக்கணிப்பவர் மூடர், கண்டிப்புரையை ஏற்பவர் விவேகமுள்ளவர்"** *(நீதிமொழிகள், 15:5, பக்.759)*

*தாய் தந்தை கண்டிக்கும்போது கண்கலங்காமல் திருந்தி வாழும் பிள்ளைகள் திருப்புமுனைகளாய் இருப்பர், முன்னேற்றத்தின் மடியில் அமர்வர், உத்தியோகம் அவர்களை உபசரிக்கும், வருவாய் அவர்களை வாழ்த்தும்.*

**"நீ உன் தந்தையையும் உன் தாயையும் மகிழ்விப்பாயாக; உன்னைப் பெற்றவளைக் களிகூரச் செய்வாயாக"** *(நீதிமொழிகள், 23:25)*

*தாய் தந்தையரை மகிழ்விக்கும் பிள்ளைகள் மதிப்புப் பெறுவர். நன்னடத்தைகளாலும், ஒழுக்கத்தாலும், உயர்கல்வியாலும், புண்ணியச் செயல்களாலம் பெற்றோரைப் பெருமைப்படுத்துவர்.*

*ஊரார் போற்றும் அளவிற்கு குடும்பப் பெருமையையும், மூதாதையர் நற்பெயரையும் காப்பர்.*

**"தந்தையரை மதிப்போருக்குத் தங்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சி கிட்டும்"** *(சீராக். 3:5)*

*பிள்ளைகள் சேர்த்து வைக்கும் செல்வத்தைக் கண்டு, பெற்றோர் அகம் மகிழ்வர், உழைக்கத் தெரிந்தவன் என்று உற்சாகப் படுத்துவர்; ஆசி கூறுவர். ஆளப்பிறந்தவன் என்று அடையாளப்படுத்துவர். ஆனாலும், தாய் தந்தையரை மேன்மைப்படுத்தும் பிள்ளைகள் ஏழ்மை நிலையில் இருந்தாலும் பெருஞ் செல்வராகக் கருதப்படுவர், நீடித்து வாழ்வர்.*

**"அன்னையை மேன்மைப்படுத்துவோர்
செல்வம் திரட்டி வைப்போருக்கு
ஒப்பாவர்"**

**"தந்தையரை மேன்மைப்படுத்துவோர்
நீடுவாழ்வர்"** *(சீராக்* 3:4-5-6)

*வறுமை வாட்டி வதைக்கும்போதும், வேலை வாய்ப்பு வெறுப்பேற்றும் போதும், வாழ்க்கையை வெறுக்கும் பிள்ளைகள், தங்கள் பிறப்பையும் பெற்றோரையும் இகழத் தொடங்கிவிடுகிறார்கள். இது முறையற்ற செயல்.*

**"தகப்பனை ஏளனம் செய்யும் கண்களையும், வயது முதிர்ந்த தாயை இகழும் விழிகளையும் இடுகாட்டுக் காக்கைகள் பிடுங்கட்டும், குழகுக் குஞ்சுகள் தின்னட்டும்"**
*(நீதிமொழிகள், 30:17)*

**உங்கள் தந்தையரை அவமதிப்பதில் பெருமை கொள்ளாதீர்கள். உங்கள் தந்தையரின் சிறுமை உங்களுக்குப் பெருமையாகாது**
*(சீராக். 3:10)*

**தாய்க்கு இழிவு ஏற்பட்டால் அது பிள்ளைகளுக்குச் சிறுமை** *(சீராக். 3:11)*

*முதிர் வயதில் தாய் தந்தையைக் காப்பாற்றும் பிள்ளைகள் நற்பேறு பெற்றவர்கள். கடைசி கால பணிவிடைகளை நிறைவேற்றினால் அவர்களுக்கு நல்லாசிகிடைக்கும்.*

**"தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங்களை நிலைநாட்டும்; தாயின் சாபம் அவற்றை வேரோடு பெயர்த்தெறிந்துவிடும்"**
*(சீராக். 3:9)*

*நோய்வாய்ப்பட்ட பெற்றோர்களை சகிப்புத் தன்மையோடு, சரிவரக் கவனிக்கும் பிள்ளைகள் போலன்றி, முதியோர் இல்லங்களுக்கு*

முடுக்கிவிட்டு, மூவேளையும் மூச்சுமுட்ட சாப்பிடும் சபிக்கப்பட்டவர்களும் இவ்வுலகில் இருக்கிறார்கள்.

**“தந்தையைக் கொடுமைப்படுத்தித் தாயை துரத்திவிடும் மகன், வெட்கக்கேட்டையும் இழிவையும் வருவித்துக்கொள்வான்”**

*(நீதிமொழிகள், 19:26, பக். 764)*

**“பிள்ளாய், உன் தந்தையின் முதுமையில் அவருக்கு உதவு; அவரது வாழ்நாளெல்லாம் அவர் உள்ளத்தைப் புண்படுத்தாதே; அவரது அறிவாற்றல் குறைந்தாலும் பொறுமையைக் கடைப்பிடி. நீ இளமை மிடுக்கில் இருப்பதால் அவரை இகழாதே”** *(சீராக். 3:13)*

பெற்றோரின் தியாகம், உழைப்பு, வேதனை, எதிர்பார்ப்பு, சவால்கள் இவற்றையெல்லாம் புரிந்துகொண்டு, அறிவுரையைக் கேட்டு, செயலில் நடைமுறைப்படுத்தி உயர் பதவிகளை உன்னதமாக அலங்கரிக்கும் பிள்ளைகள் பெற்றோரின் பெயரை நிலைநிறுத்துகிறார்கள்.

**“நேர்மையான பிள்ளையின் தந்தை மிகவும் களிகூர்வார்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்ற தகப்பன் அவர் பொருட்டு மகிழ்ச்சியடைவார்”** *(நீதிமொழிகள், 23:24)*

### விபச்சாரத்தை விட்டுவிடு

சண்டைக்காரன் வீட்டில் ஒலிக்கும் சங்கீதமும் செவிக்குச் சுவையாகத்தான் இருக்கும். திருடித் தின்னும் பொருள் தித்திப்பாய் இருப்பதுபோலத் தோன்றினும், உடலுக்கு தீமையே விளைவிக்கும். அவ்வாறே வரையறுக்கப்படாத வன்புணர்வும், உடலுறவும் வீரியத்தை உறிஞ்சிக் குடிக்கும்; உயிர்க்கொல்லி நோய்க்கு உறுதுணைப் புரியும். இனிப்பில் ஈ மொய்ப்பதைப்போல குடும்ப உறவில் குளவி கூடு கட்டும். ஆசையின் அலைகழிப்பால் மண்புழுவைப் போல் மன நிம்மதி வீட்டைவிட்டு வெளியே நகரும். தினசரி சச்சரவுகள் சலங்கைக்கட்டி ஆடும். சம்பளம், சல்லடையில் அள்ளிய நீராய் சிந்திச் செலவழிந்துபோகும். வீதிகள் வேடிக்கைப் பார்க்கும். புகார்கள் புறப்படும், காவல் நிலையம் கரம் பிடிக்கும், விவாகரத்து வெட்கப்படுத்தும்.

விபச்சாரத்தைக் குறித்து இயேசுநாதர் பின்வருமாறு கூறுகிறார்.

**“பிள்ளாய் எனக்குச் செவிகொடு, நான் சொல்வதற்கேற்ப நடக்கமறவாதே. விலைமகளின் பேச்சில் தேன் ஒழுகும். அவள் உதடுகள் வெண்ணெயினும் மிருதுவானவை. ஆனால் அவள் உறவின் விளைவோ எட்டியினும் கசக்கும்; இருபுறமும் கூரான வாளைப் போல் வெட்டும்; அவள் கால் சாவை நோக்கிச் செல்லும். அவள் காலடி பாதாளத்திற்கு இறங்கிச் செல்லும். அவளுடைய விழிகள் மாறிக் கொண்டேயிருக்கும். அவளிடமிருந்து நெடுந்தொலைவில் இருந்துக்கொள். அவள் வீட்டு வாயிற்படியை மிதிக்காதே. இல்லையேல் பிறர் முன்னிலையில் உன் மானம் பறிபோகும்; கொடியவர் கையில் உன் உயிரை இழப்பாய். அந்நியர் உன் சொத்தைத் தின்று கொழுப்பார்கள். நீ பாடுபட்டு சம்பாதித்தது வேறொரு குடும்பத்திற்குப் போய்ச்சேரும். நீ எலும்பும் தோலுமாய் உருக்குலைந்து போவாய்”**

*(நீதிமொழிகள், 5:1-12. பக். 751)*

### பிறர்மனை நயவாமை

**“உன் சொந்த நீர்த்தொட்டியிலுள்ள நீரையே குடி; உன் வீட்டுக் கிணற்றிலுள்ள நல்ல தண்ணீரையே பருகு. உன் ஊற்றுநீர் வெளியே பாய வேண்டுமா? உன் வாய்க்காலின் நீர் வீதியில் வழிந்தோட வேண்டுமா? அவை உனக்கே உரியவையாயிருக்கட்டும்; அன்னியரோடு அவற்றைப் பகிர்ந்து கொள்ளாதே. உன் நீரூற்று ஆசி பெறுவதாக! இளமைப் பருவத்தில் நீ மணந்த பெண்ணோடு மகிழ்ந்திரு. அவளே உனக்குரிய அழகிய பெண்மான், எழில்மிகு புள்ளிமான். அவளது மார்பகம் எப்போதும் உனக்கு மகிழ்வூட்டுவதாக, அவளது அன்பு உன்னை எந்நாளும் ஆட்கொண்டிருப்பதாக”**

*(நீதி மொழிகள், 5:15-19)*

### கோபத்தைக் குறைத்துக்கொள்

கோபம் குடியைக் கெடுக்கும்; கூட்டத்தைக் கலைக்கும்; உதிரத்திற்கு உயர் அழுத்தம் உண்டாக்கும்; உடன் பிறந்தவரைக் கூட ஓரங்கட்டும்; அமைதியை அலறவைக்கும்; வெறுப்பை வாந்தி எடுக்கும்; விரும்புவோரையும் விரட்டியடிக்கும்; உறக்கத்தை உதறித் தள்ளும்,குற்றத்தைக் கூறுபோடும்; சுற்றத்தைச் சூறையாடும்; நிம்மதியில் நெருப்பு மூட்டும்; ஆகாதவரென்று அடையாளப்படுத்தும்; முள்

என்று முத்திரைக் குத்தும்; தனிமையைப் பரிசாக்கும், இது கோபத்தின் இயல்பு.

நாம் வாழும் உலகம் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது. இந்த அவசர உலகில் வேலைப் பளு அதிகமான காரணத்தால் மனித மனம் பல்வேறு மன அழுத்தங்களுக்கு ஆளாகிறது. மனிதனின் தேவைகளும் விருப்பங்களும் அதிகமாக அதிகமாக அதற்கேற்றவாறு மன அழுத்தம் ஏற்படத்தான் செய்கிறது. ஒரு மனிதனின் தேவையும் விருப்பமும் நிறை வேறாதபோது அழுத்தத்தால் உந்தப்படு வதன் காரணமாகக் கோபம் வருகிறது. பழிவாங்குதல், உரிமை மறுப்பு, அளவுக்கு மீறிய ஆசை, ஏமாற்றம், வேலைப்பளு, சோம்பல், உடல் உபாதை, குடும்பச்சூழல், சொந்த பந்தங்களின் மன உளைச்சல், தூக்கமின்மை, இவையெல்லாம் கோபத்திற் கான காரணிகளாய் அமைகின்றன.

**"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**

**பகையும் உளவோ பிற"** *(திருக். 304)*

கோபத்திற்கான காரணத்தைக் கண்டுபிடித்து உடனடியாகத் தணித்தல் வேண்டும், காலம் தாழ்த்தும் போது கோபம் அதிகரித்து பிரச்சனை பெரிதாகுமே தவிர குறைய வாய்ப்பில்லை. சில பிரச்சனைக்குத் தீர்வு நிதானமும் பொறுமையும்தான்.

**"மறத்தல் வெகுளியை யம்மாட்டும்; தீய**

**பிறத்தல் அதனான் வரும்"** *(திருக். 31)*

கோபம் தற்காலிகமானதுதானே தவிர நிரந்தரமானதல்ல. பிரச்சனைத் தீரும்போது கோபமும் போய்விடும். கோபத்தை குறுகிய காலக் கோபம், நீண்டகால கோபம், தீராதக் கோபம் என்று வகைப்படுத்தலாம். பொது வாக எந்தவகைக் கோபமாக இருந்தாலும் அது வாழ்வுக்கு உகந்ததல்ல. அதனை விலக்கவே முயற்சி செய்யவேண்டும். கோபத்தைக் குறித்து இயேசுநாதர் பின்வரு மாறு கூறுகிறார்.

**"எளிதில் சினம் கொள்பவரால் சண்டை உண்டாகும்; அவர் பல தீங்குகளுக்குக் காரணமாவார்"** *(வேதாகமம், நீதிமொழிகள், 29:2, பக். 774)*

**"சினம் கொடிது; சீற்றம் பெருவெள்ளம் போன்றது"**

*(வேதாகமம், நீதிமொழிகள், 27:4, பக். 771)*

**"கடுஞ்சினம் கொள்பவனோடு நட்புக் கொள்ளாதே; எரிச்சல் கொள்பவனோடு தோழமைக் கொள்ளாதே. அப்படிச் செய்தால் உன் உயிர் கண்ணியில் சிக்கிக் கொள்ளும்"**

*(வேதாகமம், நீதிமொழிகள், 2:24, பக். 767)*

**"கடுஞ்சினம் கொள்பவர் அதற்குரிய தண்டனையைப் பெற வேண்டும்"**

*(வேதாகமம், நீதிமொழிகள், 19:19, பக். 764)*

**"எளிதில் சினம் கொள்பவர் மதிகேடானதைச் செய்வார்; விவேகமுள்ளவரோ பொறுமை யோடிருப்பார்"** *(வேதாகமம், நீதிமொழிகள், 14:17, பக். 759)*

எனவே கோபத்தைக் குறைத்து, நற்குணத்தை வெளிப்படுத்துவோம்.

## பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்து

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு பாசம் காட்ட வேண்டும், ஏனெனில் பிள்ளைகள் பெற்றோரை வெறுத்து விடக்கூடாது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும். ஏனெனில் பெற்றோரைப் பார்த்து பிள்ளைகள் கெட்டு விடக் கூடாது. ஒரே மகனாகவோ, ஒரே மகளாகவோ இருப்பதால் பிள்ளைகளைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் தயங்குகிறார்கள். பின்னாளில் பிள்ளைகள் சுதந்திரமாக முடிவெடுக்கத் துணிந்துவிடுகிறார்கள். மது, மாது, சூது, களவு என்று கண்கண்ட போக்கில் சென்று விடுகிறார்கள். திருமண வயது வரும்போது பெற்றோரின் முடிவுக்கு மறுப்புத் தெரிவிக்கிறார்கள். மனமுடைந்த பெற்றோர் புலம்பத் தொடங்கிவிடுகிறார்கள்.

நெறிதவறி நடக்கும் பிள்ளைகள், கேலி, கிண்டல், கலவரம், காவல் நிலையம், கைது, நீதிமன்றம் என பெற்றோரின் புகழையும் வெயரையும் கெடுப்பதோடு, தங்கள் எதிர் காலத்தையும் எரித்துக்கொள்கின்றனர். பெற்றோர் காட்டும் பாசம், பிள்ளைகளைப் பாழாக்கி விடக்கூடாது, பெற்றோர் கொடுக்கும் பணம் ஊதாரித்தனத்திற்கு தூண்டுதல் கூடாது. அதட்டல், மிரட்டல், எச்சரித்தல், கண்டித்தல், தண்டித்தல் என சில அதிகாரத்தைப் பெற்றோர்கள் கையில் எடுக்க வேண்டும். அன்பும் அக்கறையும்,

அரவணைப்பும் எவ்வளவு முக்கியமோ அதே அளவு கண்டிப்பும் முக்கியம். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று திரைப்படப் பாடல் கூறுவதுபோல இயேசுநாதரும் சில கருத்துகளை முன்வைக்கிறார்.

"உன் பிள்ளையைத் தண்டிதத்துத் திருத்து; அவர் உனக்கு ஆறுதல் அளிப்பார், மனத்தை மகிழ்விப்பார்"

(வேதாகமம், நீதிமொழிகள், 29:17, பக். 774)

மகன் திருந்துவான் என்கிற நம்பிக்கை இருக்கும் போதே அவனைக் கண்டித்துத் திருத்து; இல்லாவிடில், அவன் கெட்டழிந்து போவதற்கு நீ காரணமாய் இருப்பாய் (வேதாகமம், நீதிமொழிகள், 19:18, பக். 764)

"பிள்ளைகளைத் தண்டித்தத் திருததத் தயங்காதே; பிரம்பினால் அடித்தால் சாகமாட்டார்கள், நீ பிரம்பினால் அவர்களை அடித்தால், அவர்களைப் பாதாளத்துக்கு தப்புவிக்கிறவனாவாய்"

(வேதாகமம், நீதிமொழிகள், 23:13, பக். 767)

"பிள்ளைகளின் இதயத்தில் மடமை ஒட்டிக்கொண்டிருக்கும். கண்டித்துத் திருத்தும் பிரம்பால் அதை அகற்றிவிடலாம்"

(வேதாகமம், நீதிமொழிகள், 22:15, பக். 766)

"நையப்புடைத்தலே மனத்தின் மாசு அகற்றும்; கசையடி கொடுத்தலே உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும்"

(வேதாகமம், நீதிமொழிகள், 20:30, பக். 765)

"பிரம்பைக் கையாளாதவர் தம் மகனை நேசிக்காதவர்; மகனை நேசிப்பவரோ அவனைத் தண்டிக்கத் தயங்கமாட்டார்"

(வேதாகமம், நீதிமொழிகள், 13:24, பக். 758)

பிள்ளைகள் பெற்றோரின் பார்வையில் வளர்ந்தால் பாவத்திற்குள் விழமாட்டார்கள். எனவே பிள்ளைகள் தவறு செய்யும்போது, தயக்கமின்றித் தண்டித்துத் திருத்துவோம்.

### மதுவை விலக்கு

விருந்தின் விலா எலும்புகளில் ஒன்றுதான் மது. துக்கத்தைத் துரத்தும் தூக்கமருந்து, நிம்மதி தரும் நீர் ஆகாரம், உழைப்பாளிகளின் வலி நிவாரணி, இளைஞர்களின் இன்ப பானம், விழாக்காலத்தின் விசேஷ வடிநீர், ஊதியக்காரர்களின் ஊக்க பானம், பாமர மக்களின் பனம் பால், அரசுக்கு வருமானம் தரும் வற்றாத நீரூற்று, கஷ்டவாளிகளின் புளித்த கஞ்சித்தண்ணீர், திருந்தாத மது விரும்பிகளின் தினசரி தேனீர் என்றெல்லாம் பல்வேறு புனைப் பெயர்களைப் பெற்றிருப்பினும், மது நாட்டுக்கும் வீட்டுக்கும் உயிருக்கும் கேடு. இயேசுகிறிஸ்துவும் மதுவைக்குறித்துபின்வருமாறு கூறுகிறார்.

"பிள்ளாய், குடிகாரரோடு சேராதே; குடிகாரரும் பெருந்தீனியரும் முடிவில் ஏழைகளாவர்; உண்டு குடித்த மயக்கம் கந்தையை உடுத்தும்" (வேதாகமம், நீதிமொழிகள், 23:19)

"மது ஒழுங்கீனத்தைத் தோற்றுவிக்கும்; போதை தரும் குடி அமளியைத் தோற்றுவிக்கும்; அவற்றில் நாட்டம் கொள்பவர் மடையரே" (வேதாகமம், நீதிமொழிகள், 20:1)

எனவே மதுவுக்கு மயங்காமல், மனதைத் திடப்படுத்துவோம்.

### முடிவுரை

இயேசு கிறிஸ்துவின் போதனைகள் சமயம் சார்ந்தவை அல்ல, மாறாக சமூகம் சார்ந்தவை. மனிதத்தை மேம்படுத்தவும், வாழ்க்கையை வளமாக்கவும், கண்ணீரைக் கரையேற்றவும்,புரட்சியில் பூபாளம் பாடவும், ஒழுக்கத்தில் ஓங்கவும் உதவுகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலால் சமய முத்திரையை அகற்றுவோம்; சமூகத்தை வளர்த்த சான்றோர்களை முத்தம் செய்வோம்.

### துணைநூற்பட்டியல்

1. திருவிவிலியம், கிறித்துவ வேதாகம நடுவண் மையம், திண்டிவனம்-604 001.
2. பரிசுத்த வேதாகமம், ரேகா பதிப்பகம், புதுடெல்லி.
3. டாக்டர் மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட், 522, டி.டி.கே. சாலை, சென்னை-600 018.
4. பி. வனத்தையன், இயேசு பிள்ளைத்தமிழ், இரபேல் பதிப்பகம், தடுத்தாட்கொண்டூர், விழுப்புரம்.